# BSNL ஊழியர் சங்கம்
# தமிழ் மாநிலம்

சுற்றறிக்கை எண்:-4 தேதி 19.03.2010.

## சங்க அமைப்பு தினம்

அன்பார்ந்த தோழர்களே!

ஒன்பது ஆண்டுகளுக்கு முன், விசாகபட்டினத்தில் பல்வேறு சங்கங்களின் சங்கமமாய் உருவானது நமது BSNL ஊழியர் சங்கம். தபால் தந்தி தொழிற்சங்க முன்னோடிகளான தோழர்கள் தாராபாதா, ஹென்றி பாட்டன், BN கோஷ், KG போஸ் ஆகியோர் காட்டிய வர்க்க சமரப் பாதையில் நடைபோட உருவான சங்கம் BSNL ஊழியர் சங்கம். உருவாகி ஒன்பது ஆண்டுகளில் நடைபெற்ற நான்கு அங்கீகார தேர்தல்களில் இரண்டாம் தேர்தலிலிருந்து தொடர்ந்து மூன்று முறையாக பெரும்பான்மை ஊழியர்களின் ஆதரவு பெற்று வெற்றி பெற்றுள்ள சங்கம் BSNL ஊழியர் சங்கம். தொடர்ந்து உறுப்பினர் எண்ணிக்கையை அதிகரித்து வரும் சங்கம் BSNL ஊழியர் சங்கம்.

ஆயுட்காலம் முழுவதற்கும் இரண்டே பதவி உயர்வு என்றிருந்த நிலையினை மாற்றி பணிக்காலத்தில் அனைவருக்கும் குறைந்த பட்சம் நான்கு பதவி உயர்வு என்ற நிலையை உறுதி செய்துள்ள சங்கம் BSNL ஊழியர் சங்கம். அங்கீகார ரத்து என்பது உள்ளிட்ட நிர்வாகத்தின் மிரட்டல்களையும் சந்தித்து, பல துரோகங்களையும் மீறி அதிகாரிகளுக்கு இணையான நல்லதொரு ஊதிய உடன்பாட்டையும் கண்டிட்ட சங்கம் நமது BSNL ஊழியர் சங்கம். நிரந்தர ஊழியர்கள் மட்டுமல்லமல் ஓய்வு பெற்றவர்களின் நலன் காக்க ஓய்வூதியதாரர் அமைப்பை உருவாக்கி வழிகாட்டி வரும் சங்கம் BSNL ஊழியர் சங்கம். அது மட்டுமல்லாமல் BSNLல் உள்ள ஒப்பந்த மற்றும் தற்காலிக ஊழியர்களுக்காக ஒரு சம்மேளனத்தை உருவாக்கி அவர்களை அரசின் சுரண்டலிலிருந்து பாதுகாக்க போராடும் சங்கம் நமது BSNL ஊழியர் சங்கம். ஊழியர்களுக்கு கட்டாய ஓய்வு/விருப்ப ஓய்வு என்பதனை ஏற்காமல் தொடர்ந்து போராடி வரும் சங்கம் BSNL ஊழியர் சங்கம். மத்திய அரசின் தனியார் மய தாராள மய கொள்கையினை எதிர்த்து தொடர்ந்து போராடி வரும் சங்கம் BSNL ஊழியர் சங்கம். இந்நிறுவனத்தை பாதுகாக்க அடிமட்ட ஊழியர்கள் முதல் அதிகாரிகள் வரை உள்ளடக்கிய JOINT FORUM உருவாக்கி தொடர்ந்து போராடி வரும் சங்கம் நமது BSNL ஊழியர் சங்கம். நம் நாட்டிலுள்ள ஏழை எளிய மக்களின் நலன் காக்க இந்திய நாட்டு உழைப்பாளி வர்க்கத்துடன் இணைந்து போராடி வரும் சங்கம் நமது BSNL ஊழியர் சங்கம்.

இத்தகைய பெருமை மிக்க நமது சங்கத்தின் **பத்தாவது அமைப்பு தினம் 22.03.2010.** அன்றைய தினத்தில் தமிழக முழுவதும் உள்ள நமது கிளைச் சங்கக்ங்கள் கொடியேற்றி அனைவருக்கும் இனிப்பு வழங்கி கொண்டாடிட வேண்டும். அது மட்டுமல்லாமல், கடந்த ஆண்டுகளை விட சிறப்பாக ரத்த தானம், கண் தானம், ஏழை எளிய மக்களுக்கும், மாணவர்களுக்கும் உதவிகள் உள்ளிட்ட பல சமூக நலப் பணிகளையும் செய்திட வேண்டும் என தமிழ் மாநில சங்கம் கேட்டுக் கொள்கிறது. அமைப்பு தினம் கொண்டாடிய விதம், அது தொடர்பான சுற்றறிக்கைகள், புகைப்படங்கள், பத்திரிக்கை செய்திகள் ஆகியவற்றை மாநிலச் சங்கத்திற்கு தகவல் அனுப்பிட வேண்டும் எனவும் மாநிலச் சங்கம் கேட்டுக் கொள்கிறது.

**BSNLஐ பாதுகாப்போம்:-**

முப்பது சதவிகித பங்கு விற்பனை, ஒரு லட்சம் ஊழியர்களை விருப்ப ஓய்வு திட்டத்தில் வீட்டுக்கு அனுப்புவது, நமது காப்பர் கேபிள்களை தனியாருக்கு தாரை வார்ப்பது மற்றும் நமது நிறுவன பணிகளை OUTSOURCING செய்வது ஆகிய சாம்பிட்ரோடா கமிட்டியின் பரிந்துரைகளுக்கு எதிர்ப்பு தெரிவித்தும் ITS அதிகாரிகளை உடனடியாக BSNLல் இணைக்க வேண்டும், BSNL வளர்ச்சிக்கு தேவையான 9.3 கோடி தொலைபேசி இணைப்புகளுக்கான டெண்டரை அமுலாக்க வேண்டும், IDA விகிதத்தில் பென்சனை மாற்ற வேண்டும் உள்ளிட்ட கோரிக்கைகளை வலியுறுத்தியும் JOINT FORUM சார்பாக சக்தி மிக்க ஆர்ப்பாட்டங்கள் தமிழகத்தின் அனைத்து பகுதிகளிலும் 15.03.2010 அன்று நடைபெற்றது.

அடுத்த கட்ட இயக்கங்களாக.....

**26.03.2010 அன்று மாவட்ட தலைநகர்களில் தர்ணா**
**20.04.2010 அன்று ஒரு நாள் அடையாள வேலை நிறுத்தம்**

ஆகியவற்றை நடத்திட JOINT FORUM முடிவெடுத்துள்ளது. இந்த முக்கியமான இயக்கங்கள் முழுவெற்றி பெற்றிட அனைத்து பகுதி தொழிலாளர்களையும் பங்கேற்கச் செய்திட வேண்டும் என தமிழ் மாநிலச் சங்கம் கேட்டுக்கொள்கிறது.

**புதிய ஊதிய விகிதம்:-**

BSNL இயக்குனர் கூட்டத்தில் ஏற்றுக் கொள்ளப்பட்ட புதிய ஊதிய உடன்பாடு ஒப்புதலுக்காக இன்று(19.03.2010) DOTக்கு அனுப்பப்பட்டுள்ளது. விரைவில் DOTயின் ஒப்புதலை பெறுவதற்கும் நமது மத்தியசங்கம் முயற்சி மேற்கொண்டு வருகிறது.

**JAO தேர்வு முடிவுகள்:-**

ஜனவரி மாதம் நடைபெற்ற இள நிலை கணக்கியல் அதிகாரிகளுக்கான 40 சதவிகித போட்டி தேர்வு முடிவுகள் இன்று வெளியாகி உள்ளது. அந்த முடிவுகள் நமது இணைய தளத்திலும் உள்ளது. தமிழகத்தில் மொத்தம் 161 தோழர்கள் வெற்றி பெற்றுள்ளனர். வெற்றி பெற்ற அனைவரையும் தமிழ் மாநிலச் சங்கம் வாழ்த்துகிறது. SC/ST ஊழியர்களுக்கு Relaxation தர வேண்டும் எனும் நமது வேண்டுகோளை மாநில நிர்வாகம் பரிசீலிக்க ஏற்றுக் கொண்டுள்ளது.

வாழ்த்துக்களுடன்,

**தோழமையுள்ள,**
**S.செல்லப்பா,**
**மாநில செயலர்.**